CMEV
CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No 17A, Pedris Road, Colombo 3, Tel: **011 3010662-4**, Fax: **011 2577117**
**E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

## நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2015

### தேர்தல் தின இறுதி ஊடக அறிக்கை

17 ஆகஸ்ட் 2105

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி), இந்த முறை 2015 பொதுத் தேர்தலுக்காக, அண்ணளவாக 4,000 தேர்தல் கண்காணிப்பாளர்களைக் களத்தில், வாக்களிப்பு நிலையங்களில் மற்றும் நடமாடும் அணிகளில் ஈடுபடுத்தியது. இதற்கு மேலதிகமாக, 75 நடமாடும் அணிகள், 21 சர்வதேச கண்காணிப்பாளர்களையும் மற்றும் வாக்கெண்ணும் மையங்களில் 90 கண்காணிப்பாளர்களையும், தே.வ.க.நி பணிகளில் ஈடுபடுத்தியது.

வாக்களிப்பு தினத்தன்று, 109 பாரதூரமான சம்பவங்களுடன் 207 சிறிய சம்பவங்கள் உட்பட மொத்தம் 316 சம்பவங்கள் தே.வ.க.நி இல் பதிவு செய்யப்பட்டது. இந்த 109 சம்பவங்களுள் 37 சம்பவங்களை ஐ.தே.க க்கு எதிராகவும் மற்றும் 28 சம்பவங்கள் ஐ.ம.சு.கூ இற்கு எதிராகவும் தே.வ.க.நி ஆவணப்படுத்தியது. ஒரு சம்பவம், நாவலப்பிட்டியவில் முன்னாள் மாகாண சபை அமைச்சர் ஒருவர் ஐ.தே.க வேட்பாளர் ஒருவரால் தாக்கப்பட்டதுடன் தொடர்புடையதாக இருந்தது. வாக்களிப்பின் போது அச்சுறுத்தல் மற்றும் மிரட்டலுடன் தொடர்பான ஆறு சம்பவங்களும் அறிவிக்கப்பட்டன. தேர்தல் தினத்தன்று, பரப்புரைகள் மேற்கொள்ளல் மற்றும் தேர்தல் சட்டங்களின் மீறல்கள் உட்பட, ஏனைய பல்வேறு சம்பவங்களும் அறிவிக்கப்பட்டன. இவற்றைத் தவிர்த்து, பொதுத் தேர்தல் ஒப்பீட்டளவில் சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான வகையில் நடைபெற்றதை தே.வ.க.நி கவனத்தில் கொள்கிறது.

ஜனாதிபதித் தேர்தலின் 81.52% என்ற உயர்ந்த வாக்காளிப்பு வீதத்திலிருந்து இம்முறை பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு வீதம் குறைவடைந்து 70 - 75% ஆக இருந்ததாக தே.வ.க.நி கணிப்பிடுகிறது. ஜனவரி 2105 இல் ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் குறிப்பாக குறைந்த வாக்களிப்பு வீதம் அவதானிக்கப்பட்ட பிரதேசங்கள் மட்டக்களப்பு, திகாமடுல்ல, கண்டி, களுத்துறை, கம்பஹா. காலி, மொனராகலை மற்றும் குருநாகல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான ஒரு தேர்தலுக்கான உறுதியானதும் மற்றும் ஏற்றதுமான ஒரு சுற்றுச்சூழலை வழங்கியமைக்காக, தேர்தல்கள் ஆணையாளர், திரு.மகிந்த தேசப்பிரிய மற்றும் பொலிஸ் மா அதிபர், திரு.என்.கே. இலங்கக்கோன் மற்றும் அவர்களது உத்தியோகத்தர்கள் ஆகியோரை தே.வ.க.நி பாராட்டுகிறது. குறிப்பாக, தே.வ.க.நி இன் தேர்தலுக்கு முந்திய காலம் மற்றும் தேர்தல் தினத்தன்றான கண்காணித்தல்கள், தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதில் பொலிசாரினால் எடுக்கப்பட்ட துரிதமான நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அத்தகை நடைமுறைகள் சட்டவாட்சியை நிலைநாட்டுவதற்கும் மற்றும் தேர்தலின் நம்பகத்தன்மையை பாதுகாப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மீள் ஸ்தாபித்தன.

உடலூனங்களுடனான ஆட்கள், அவர்களது வாக்களிக்கும் உரிமையை உறுதிப் படுத்துவதற்கான குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகளைப் பணித்து, மே 2015 இல் தேர்தல்கள் ஆணையாளரால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை இல.De/LI/PR/03 இற்கான ஒரு விசேட குறிப்பிடுதலுடன், உடலூனங்களுடனான ஆட்களின் வாக்களித்தல் உரிமைகளை அங்கீகரித்து, வழங்கும் ஒரு சுற்றாடலை பொதுத் தேர்தலுக்கான அழைப்பு இம்முறை உருவாக்கியது. தே.வ.க.நி இந்த முயற்சிக்கு ஆதரவளிப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்ததுடன் பொதுத் தேர்தலில் இது தொடர்பில் சில முன்னேற்றங்களையும் அவதானித்தது, ஆயினும் உடலூனம் கொண்ட ஆட்களிடையே வாக்களிக்கும் உரிமையின் முழுமையான பயனுறுதலை அளிப்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அது வலியுறுத்துகிறது.

இறுதியாக, தேர்தல் செயன்முறைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அரசியலமைப்பு ரீதியானதும் மற்றும் சட்டச் சீர்திருத்தங்களின்  தேவையை வலியுறுத்தி தேர்தல்கள், பொலிஸ் மற்றும் பொதுச் சேவைகள் என்பவற்றுக்கான சுயாதீன ஆணைக்குழுக்கள் உட்பட சுயாதீன நிறுவனங்களுக்கான தேவையை தே.வ.க.நி கோருகிறது. இது தொடர்பில், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் முழுமையான அமுல்படுத்தல் மற்றும் மேலும் தாமதமின்றி அரசியலமைப்புச் சபையின் நியமனத்துக்காகவும் தே.வ.க.நி கோருகிறது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றால் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

**தே.வ.க.நி இன் அனைத்து  அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் என்பன ஒன்லைனில் www.cmev.org எனும் முகவரியில் அணுக முடியும்**



கலாநிதி.பா.சரவணமுத்து
இணை அமைப்பாளர்



திரு.உதயா களுப்பத்திரன
இணை அமைப்பாளர்



திருவாட்டி. சீத்தா ரஞ்சனி
இணை அமைப்பாளர்